# சேலம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் லிமிட் எஸ் 1227

**83/34 இரண்டாவது அக்ரஹாரம், சேலம்– 636 001**

**வேலைவாய்ப்பு அறிவிப்பு எண்–1** **நாள் :27.01.2020**

சேலம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கத்தில் காலியாக உள்ள கீழ்கண்ட பணியிடங்களுக்கு தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பதவியின் பெயர் | காலி பணியிடங்களின் எண்ணிக்கை | வகுப்பு | விண்ணப்பிக்க தகுதிகள் | சம்பள விகிதம் ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | இளநிலை எழுத்தர் (Junior Clerk) | 2 | பொது-1<br>ஆதிதிராவிடர் -1 (அருந்ததியினர் ) (விதவை) | * எஸ்.எஸ்.எல்.சி(SSLC) தேர்வில் தேர்ச்சி பெற்று மேனிலை செகண்டரி படிப்பிற்கு சேரும் தகுதி அல்லது தமிழ்நாடு மாநிலப்பணிகளின்கீழ் பணி அமர்த்தப்பட தகுதி பெற்றிருக்கவேண்டும்.<br>* "கூட்டுறவு பயிற்சி" முடித்து சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.<br>* கூட்டுறவு நிறுவனத்தில் குறைந்த பட்சம் 2 ஆண்டுகள் பணிபுரிந்து முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும் | Rs.4000-19360+ G.P.Rs.900/- |
| 2 | விற்பனையாளர் நிலை (II) (Salesman Grade II) | 2 | பொது-1<br>ஆதிதிராவிடர் -1 (அருந்ததியினர் ) (விதவை) | * எஸ்.எஸ்.எல்.சி(SSLC) தேர்வில் தேர்ச்சி பெற்று மேனிலை செகண்டரி படிப்பிற்கு சேரும் தகுதி அல்லது தமிழ்நாடு மாநிலப்பணிகளின்கீழ் பணி அமர்த்தப்பட தகுதி பெற்றிருக்கவேண்டும்.<br>* "கூட்டுறவு பயிற்சி" முடித்து சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.<br>* கூட்டுறவு நிறுவனத்தில் குறைந்த பட்சம் 2 ஆண்டுகள் பணிபுரிந்து முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும் | Rs.4000-19360+ G.P.Rs.900/- |
| 3 | துணி மதிப்பீட்டாளர் (Appraiser) | 1 | பொது- 1 | * எஸ்.எஸ்.எல்.சி(SSLC) தேர்வில் தேர்ச்சி பெற்று மேனிலை செகண்டரி படிப்பிற்கு சேரும் தகுதி அல்லது தமிழ்நாடு மாநிலப்பணிகளின்கீழ் பணி அமர்த்தப்பட தகுதி பெற்றிருக்கவேண்டும்.<br>* நெசவுத்தொழில் தெரிந்தவராக இருத்தல் வேண்டும். | Rs.4000-19360+ G.P.Rs.900/- |
| 4 | தறி மேற்பார்வையாளர் (Loon Supervisor) | 1 | பொது- 1 | * எஸ்.எஸ்.எல்.சி(SSLC) தேர்வில் தேர்ச்சி பெற்று மேனிலை செகண்டரி படிப்பிற்கு சேரும் தகுதி அல்லது தமிழ்நாடு மாநிலப்பணிகளின்கீழ் பணி அமர்த்தப்பட தகுதி பெற்றிருக்கவேண்டும்.<br>* நெசவுத்தொழில் தெரிந்தவராக இருத்தல் வேண்டும். | Rs.4000-19360+ G.P.Rs.900/- |
| 5 | ஜரிகை ஓட்டுபவர் | 1 | பொது- 1 | * எஸ்.எஸ்.எல்.சி(SSLC) தேர்வில் தேர்ச்சி பெற்று மேனிலை செகண்டரி படிப்பிற்கு சேரும் தகுதி அல்லது தமிழ்நாடு மாநிலப்பணிகளின்கீழ் பணி அமர்த்தப்பட தகுதி பெற்றிருக்கவேண்டும்.<br>* நெசவுத்தொழில் தெரிந்தவராக இருத்தல் வேண்டும். | Rs.4000-19360+ G.P.Rs.900/- |

**மேற்காணும் காலி பணியிடங்களானது இன சுழற்சி அடிப்படையிலானது.**

1. விண்ணப்பதாரர்களின் குறைந்தபட்ச வயது 18 ஆகும்.
2. பொது வகுப்பினராக இருந்தால் (O.C) 18 வயது முதல் 30 வயதுக்குட்பட்டு இருக்க வேண்டும். மாற்றுத்திறனாளிகளுக்கு வயது உச்ச வரம்பில் 10 வருடம் கூடுதலாக வழங்கப்படும்.
3. SC/ST/MBC/BC/BC(M) ஆக இருந்தால் 18 வயது முதல் 57 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பங்களை "மேலாண்மை இயக்குநர்" **சேலம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் லிட், எஸ்.1227, 83/34 இரண்டாவது அக்ரஹாரம், சேலம்–636001** என்ற முகவரியில் சங்க வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.
5. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய இணைப்புகளுடன் "மேலாண்மை இயக்குநர்" **சேலம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் லிட். எஸ்.1227, 83/34 இரண்டாவது அக்ரஹாரம், சேலம்–636001** என்ற முகவரியில் **18.02.2020 மாலை 5.00 மணிக்குள்** கிடைக்குமாறு பதிவு தபாலில் அனுப்பிட வேண்டும். அல்லது நேரில் ஒப்படைக்க வேண்டும். மேல் உறையின் மீது விண்ணப்பிக்கப்படும் பணியிடத்திற்கான பதவியின் பெயரை பெரிய எழுத்துக்களில் தவறாது குறிப்பிட வேண்டும்.
6. இப்பணியிடங்களுக்கு நாளிதழ் விளம்பரம் மூலம் பெறப்படும் விண்ணப்பங்களின்படி தகுதியான நபர்கள் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்படும் பட்டியலில் உள்ள நபர்களும் நேர்காணலுக்கு அழைக்கப்பட்டு, நேர்காணல் அடிப்படையில் மட்டுமே தேர்வு செய்யப்படுவர்
7. தகுதியில்லாத நபர்களின் விண்ணப்பங்களும், **18.02.2020 அன்று மாலை 5.00 மணிக்குப் பின்னர்** பெறப்படும் விண்ணப்பங்களும், சரிவர பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் உரிய சான்றாவணங்கள் இல்லாத விண்ணப்பங்களும் ஏற்கப்படமாட்டாது.
8. விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் நகல்களினை தானே சான்றொப்பமிட்டு (Self Attested) இணைத்து அனுப்ப வேண்டும்.

   அ) கல்வி சான்றிதழ், ஆ) வயது குறிப்பிட்ட கல்வி சான்றிதழ்/பிறப்புச் சான்றிதழ்

   இ) ஜாதி சான்றிதழ், ஈ) முன்னுரிமை சான்றிதழ், உ)குடும்ப அட்டை

   ஊ) பணி முன் அனுபவ சான்றிதழ்

   எ) அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரிடமிருந்து (Gazetted Officer) விண்ணப்பதாரின் புகைப்படத்துடன் கூடிய நன்னடத்தை சான்றிதழ். புகைப்படமும் சான்றொப்பம் செய்யப்பட்டிருக்க வேண்டும். (அறிவிப்புக்கு பின்னர் பெறப்படவேண்டும்)

   ஏ) வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பதிவு அட்டை

   ஐ) விண்ணப்பிக்கும் தகுதிகளுக்கான இதர சான்றிதழ்கள், ஒ)மாற்றுத் திறனாளியாக இருப்பின் அதற்கான சான்றிதழ்
9. இப்பணி நியமனம் தொடர்பான நடவடிக்கைகளை மாற்றியமைப்பதற்கும், நிறுத்தி வைப்பதற்கும், ரத்து செய்வதற்கும் சேலம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கத்தின் "பணியாளர் தேர்வுக்குழு" விற்கு முழு அதிகாரம் உண்டு.

**மேலாண்மை இயக்குநர்**
**சேலம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி**
**மற்றும் விற்பனைச் சங்கம் லிமிட் எஸ் 1227**